**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 22.04.2025</u>**

**OS.49/2014**

**வா.சா.1 திருமதி.இந்திராணி**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**(IA.No.04/2025 கடந்த 28.03.2025 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டார்)**

**<u>8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு தேதி நினைவில்லை ஆனால் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு திருமணம் நடைபெற்றது. எனக்கு நடந்த திருமணம் காதல் திருமணம் என்றால் சரிதான். சின்னசாமி என்பவருக்கு மாரிமுத்து என்பவர்தான் மனைவி என்றால் இல்லை, நான் தான் மனைவி. மேற்படி மாரிமுத்து என்பவர் ஜாலியூர் கிராமத்தை சார்ந்தவர் என்றால் இல்லை. அவர் எந்த ஊரை சார்ந்தவர் என்றால் அது எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் பத்தி 4ல் தாவா சொத்தானது எனக்கும் எனது கணவருக்கும் பாத்தியப்பட்ட பிதுராஜ்ஜியசொத்துக்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. பிதுராஜ்ஜியசொத்து என்பதற்கு என்ன விளக்கம் என்றால் நாங்கள் காடுவெட்டி சம்பாதித்த சொத்துக்கள். நானும் எனது கணவரும் கூட்டாக அனுபவித்து வந்த சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நானும் எனது கணவரும் கூட்டாக அனுபவித்து வந்ததற்கு எனது பெயரில் ஏதாவது பட்டா, சிட்டா, அடங்கல் ஆவணங்கள் ஏற்பட்டுள்ளதா என்றால் எனது பெயரில் இல்லை, எனது கணவர் பெயரில் உள்ளது. 1 முதல் 3 பிரதிவாதிகளான சங்கீதா, மாதேஸ், மாலதி யார் என்றால் மாதேஸ் எனது

மகன் சங்கீதா, மாலதி எனது மகள். எனது மகள், மகன் ஆகியோருக்கும் எனக்கும் விரோதம் இருந்து வருகிறதா என்றால் இல்லை.

3. மேற்படி சங்கீதா, மாதேஸ், மாலதி ஆகிய பிரதிவாதிகள் எனக்கும் சின்னசாமி என்பவருக்கும் பிறந்த குழந்தைகள் இல்லை, எனக்கும் வேறு நபருக்கும் பிறந்த குழந்தைகள் என்றால் சரியல்ல. உண்மையில் எனக்கும் சின்னசாமிக்கும் பிறந்த குழந்தைகள் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்றால் அவர்களையும் என்னுடன் சேர்த்து வாதியாக இருந்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல, நான் அவர்களை 1 முதல் 3 பிரதிவாதிகளாக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன். 8ம் பிரதிவாதி தனம் என்பவர் எனது கணவர் சின்னசாமியிடம் இரண்டரை ஏக்கர் நிலத்தை 28.05.2007 ம் தேதியன்று கிரையம் பெற்றார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது.

4. எனது கணவர் சின்னசாமியிடம் கிரையம் பெற்ற இரண்டரை ஏக்கர் நிலத்தை 8ம் பிரதிவாதி தனம் 25.02.2008 ம் தேதியில் தாவா சொத்துக்கு பட்டா, சிட்டா, அடங்கல் போன்ற வருவாய் ஆவணங்களை தனது பெயருக்கு பெற்று அவர் சொத்தை அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 8ம் பிரதிவாதி தனம் கிரையம் பெற்ற சொத்திற்கு எனது பெயரில் பட்டா உள்ளதா என்றால் எனது கணவர் பெயரில் தான் பட்டா உள்ளது.8ம் பிரதிவாதி தனம் எனது கணவர் சின்னசாமியிடம் கிரையம் பெற்ற விவரம் எனக்கு எப்பொழுது தெரியும் என்றால் கடந்த 13 வருடத்திற்கு முன்பு தெரியும், அவ்வாறு தெரிந்த பிறகுதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

5. எனக்கு 13 வருடத்திற்கு முன்பு தனம் எனது கணவரிடம் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார் அது மோசடியாக பெறப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொண்ட நான் ஏதாவது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அறிவிப்பு அனுப்பிதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல எந்த அறிவிப்பும் அனுப்ப வில்லை, தனம் கிரையம் பெற்ற விவரங்களை எல்லாம் நான் தெரிந்து கொண்டு நான் அமைதியாக இருந்துவிட்டு 2014 ல் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. நான் தாவா சொத்து உள்ள ஊரிலேயே ரொம்ப காலத்திற்கு முன்பிருந்தே இல்லை என்று சொன்னால் சரியல்ல, எனது கணவர் சின்னசாமி 13 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார் அதன் பிறகு தான் நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். 2008 ம் வருடத்தில் இருந்து தனம் தான் தான் கிரையம் பெற்ற தன்னுடைய நிலத்திற்கு இன்று வரை கந்தாயம் செலுத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, யாரும் கந்தாயம் நிலத்திற்கு பெறுவது கிடையாது. 26.05.2009 ம் தேதியிலும் 23.03.2011 ம் தேதியிலும், 18.02.2012 தேதியிலும் தனம் செலுத்திய கந்தாய ரசீதுகள் இந்த வழக்கில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது.

7. எனக்கு எவ்வளவு பங்கு வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு அரை பங்கு வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நானும் எனது கணவரும் சேர்ந்து வழக்கு சொத்துக்களை வாங்கினேன் என்று சொல்வதற்கு ஏதாவது ஆவணங்கள்

ஏதாவது உள்ளதா என்றால் எனது பெயரில் இல்லை, எனது கணவர் பெயரில்தான் உள்ளது. 2006 ம் வருடத்திலேயே இந்த தாவா சொத்து இல்லாத வேறு சொத்தை சென்னையன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. சென்னையன் என்பவர் எனக்கு யார் என்று எனக்கு தெரியாதா என்றால் தெரியும். சென்னையனை எதற்காக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் அவரும் வழக்கு சொத்துக்களை வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளார் அதனால் அவரை சேர்த்துள்ளேன்.

8. நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் 6ம் பத்தியில் சின்னசாமி சுயமாக சம்பாதித்த சொத்தில் அவருடைய சகோதரிக்கு எந்த பாக உரிமையும் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சின்னசாமியின் சகோதரிகள் செய்துகொடுத்த பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது என்று நான் சொல்கிறேன் என்றால் சரிதான். சின்னசாமியின் சகோதரிகள் பெயரை இந்த வழக்கில் ஏன் சேர்க்கவில்லை என்றால் நான் அவரது சகோதரிகளான சின்னம்மாள், பார்வதி, ஜெயக்கொடி ஆகியோரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன், அவர்களுக்கு ஏற்கனவே பாகம் இல்லை என்று சொல்லியுள்ளேன்.

9. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் தனம் எனது கணவரிடம் கிரையம் பெற்ற 28.05.2007 ம் தேதியிட்ட ஆவணத்தை ரத்து செய்யசொல்லி இந்த வழக்கில் நான் பரிகாரம் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, கேட்டுள்ளேன். தாவா சொத்துக்கள் எல்லாம் ஆரம்ப காலத்தில் எனது மாமியார் நாகம்மாள் என்பவருக்கு டீக்காடு பட்டா கொடுக்கப்பட்டது என்றால்

சரியல்ல, எனது கணவர் சின்னசாமி என்பருக்கு மட்டும் தான் டீக்காடு பட்டா கொடுக்கப்பட்டது. எனக்கு சொத்துக்கள் சொந்தம் என்று சொல்லும்போது நான் ஏன் பட்டா பெறவில்லை என்றால் வீட்டில் ஒருவருக்கு தான் கொடுப்பார்கள் அந்த வகையில் எனது கணவர் சின்னசாமிக்கு தான் கொடுத்தார்கள்.

10. சின்னசாமியின் சுயராஜ்ஜித சொத்துக்கள் தான் தாவாசொத்துக்கள் அதனை அவர் தனம் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் அந்த சொத்தில் பங்குகோர யாருக்கும் உரிமை இல்லை என்றால் சரியல்ல.எனது கணவர் சின்னசாமியிடம் தனம் கிரயம் பெற்ற பிறகு தனத்திற்கு கொடுத்த பட்டா எண். 467 என்ற பட்டா பெற்று அவர் அனுபவித்து வருகிறார் என்றால் அவருக்கு கொடுத்த பட்டா தவறானது. தனம் என்பவருக்கு பட்டா தவறாக கொடுக்கப்பட்டுள்ளது அதனை ரத்து செய்து எனது பெயருக்கு பட்டா கொடுக்க சொல்லி வருவாய் துறையில் ஏதாவது மனு கொடுத்தேனா என்றால் இல்லை.

11. எனது கணவர் சின்னசாமி இறந்து 5 வருடம் கழித்துதான் நான் சோலைக்கொட்டாய் என்ற ஊருக்கு வந்தேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு வந்தபிறகு ஊரில் உள்ளவர்கள் தூண்டுதலின் பேரில் தவறான லாபம் அடைய வேண்டி தனம் மீதும், மற்றவர்கள் மீதும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சட்ட விரோதமாக தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. எனது கணவர் உடன் பிறந்த சகோதரிகளுக்கு பாகம் உள்ளதா என்றால் அவர்களுக்கு பாகம் இல்லை என்றுதான் நான் கோரியுள்ளேன். எனக்கு

பேர்பாதி சொத்து வேண்டும் என்று சொல்லியுள்ளேன் மீதி சொத்துக்கள் யாருக்கு என்றால் அது எனது பிள்ளைகளுக்கு சேரவேண்டியது.

12. நான் வழக்கில் 4ல் 1 பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன், அவ்வாறு கேட்டுவிட்டு எனக்கு பேர்பாதி சொத்துக்கள் என்று இப்பொழுது கூறுவதே இந்த வழக்கை தள்ளுபடி ஆக கூடியது என்றால் சரியல்ல. நான் சின்னசாமியின் மனைவியே கிடையாது, நான் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்தவழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

Sd/–R.Vijayan,
Sub Judge, Harur